## நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

## சி.சி.எண். 243/2020

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.அலமேலு, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேலு | வயது | 45 |
| த . பெ . (அ)க . பெ . | ஆறுமுகம் | தொழில் | பயணச்சீட்டு பரிசோதகர் |
| ஊர்/பணிபுரியுமிடம் | சேலம் கோட்டம் | சமயம் | |
| வட்டம் | சேலம் | சாதி | |
| மாவட்டம் | சேலம் | | |

## முதல் விசாரணை. எதிரி ஆஜர்.

நான் தற்போது ஈரோடு இந்திய ரயில்வேயில் பயணச்சீட்டு பரிசோதகராக சேலம் கோட்டத்தில் பணிபுரிகிறேன். நான் கடந்த 11.10.2018 ல் மேற்படி பணியாக காட்பாடியிலிருந்து ஈரோடு செல்லும் சபரி எக்ஸ்பிரஸ் வண்டி எண்.17230 ல் பணியில் இருந்த போது அதிகாலை சுமார் 3.00 மணியளவில் மேற்படி வண்டி காட்பாடியிலிருந்து கிளம்பிய சிறிது நேரத்திலேயே எஸ்.இ.1 பெட்டியில் இருந்த ஒரு பயணி ஓடி வந்து தன்னிடத்தில் இருந்த கைப்பையை யாரோ பறித்துச்சென்றதாக என்னிடம் புகார் தெரிவித்தார். பின்பு நான் உடனடியாக ரயில்வே வணிக துறை சேலத்துக்கு தகவல் கொடுத்தேன். அதன்படி ஜோலார் பேட்டையில் இருப்புப்பாதை போலீசார் வந்தார்கள். அவர்களிடம் நான் மேற்படி பயணியின் விவரங்களை கூறினேன். என்னிடம் வந்த பயணியின் பெயர் பிந்து என்பவர் ஆவார். இது சம்மந்தமாக இருப்புப்பாதை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

மேற்படி பெண் பயணி என்னிடம் புகார் அளித்தது இரவு 3.00 மணி என்றால் சரிதான், அதிகாலை இரவு 3.00 மணி. களவு போன இடம் காட்பாடி சந்திப்பில் என்று என்னிடத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி களவு போனதாக சொல்லப்படும் சமயத்தில் ரயில் சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை-** இல்லை

சாட்சியின் கையொப்பம்